## எலிக்காய்ச்சல் நோய் என்று சந்தேகம் கொண்டால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் ?

எலிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால், உடனடியாக தகுதியான வைத்திய நிபுணரிடம் மருத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

குறிப்பிடப்பட்ட அதிக ஆபத்துள்ள செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபட்டிருந்தால் அதனை வைத்தியரிடம் அறிவிக்கவும்.

சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்காவிட்டால், இந்நோயானது சிறுநீரகம், இதயம், மற்றும் மூளை போன்ற உறுப்புக்களைப் பாதித்து மரணத்தையும் ஏற்படுத்தும்

## எலிக்காய்ச்சல் ஏற்படாது தடுப்பது எப்படி?

- எலிகளின் தொற்றுக்களிலிருந்து தடுப்பதற்கு வயல் வெளிகளின் சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருக்கவும்.
- வயல்களை சரியான முறையில் பராமரிக்கவும்.
- வயல்களுக்குள் இறங்குவதற்கு முன்னர் தோலில் ஏதேனும் சிராய்வுகள், அல்லது காயங்கள் இருந்தால் (பாதங்களில் அல்லது கை விரல்களில்) அதனை நீர் உட்புகாத வகையில் கட்டுப் போடுதல் வேண்டும்.
- தேவையில்லாமல் நீர் தேங்கியிருக்கும் இடங்களுக்கோ அல்லது சேற்று நிலங்களுக்கோ போவதை தவிர்க்கவும். மற்றும் இவ்வாறான இடங்களில் குளிப்பதையோ அல்லது கழுவுவதையோ தவிர்க்கவும்.
- உங்களை எலிக்காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வயல்களுக்குச் செல்வதற்கு ஒரு கிழமைக்கு முன்பாக முற்பாதுகாப்பிற்கான நுண்ணுயிர் கொல்லி மருந்துகளை சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

**உடனடியாக தகுந்த வைத்தியரிடம் செல்லுங்கள் !**

தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவு
சுகாதார அமைச்சு



# எலிக்காய்ச்சல்

## லெப்டோஸ்பைரோசிஸ்

தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவு
சுகாதார அமைச்சு

## எலிக்காய்ச்சல் எவ்வாறு பரவுகின்றது ?

- இந்நோயானது லெப்டோஸ்பைரா’’என்னும் பக்டிரீயாவால் ஏற்படுகின்றது.
- எலிகள் போன்ற காவும் விலங்குகளின் சிறுநீர் மூலம் மாசடைந்த நீர் மற்றும் மண்ணில் இப் பக்டிரீயா பொதுவாக காணப்படுகின்றது.
- தோலில் உள்ள வெட்டுக்காயங்கள் அல்லது சிராய்வுகள் ஊடாக, அல்லது மூக்கு, வாய், கண்களில் உள்ள மென் சவ்வுகள் ஊடாக உடம்பினுள் பக்டிரீயாக்கள் உட்செல்கின்றன.




## எலிக்காய்ச்சல் தொற்றக் கூடிய அதிக ஆபத்திலுள்ள நபர்கள் யார் ?



- வயல்களில் வேலை செய்யும் விவசாயிகள்
- சேற்று நிலங்களில் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுபவர்கள்.
- ஆறுகள் அல்லது வயல் வெளிகளில் செங்கல் தயாரித்தல் அல்லது மணல் அள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள்.
- இரத்தினக்கல் சுரங்கத் தொழிலாளர்கள்
- சேற்று நிலம் அல்லது நீர் தேங்கிய இடங்களில் விளையாட்டு அல்லது செயற்பாடுகளில் ஈடுபடும் மக்கள்

## எலிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள் என்ன ?

- அதிகமான காய்ச்சல்



- கடுமையான தசை வலி



- கண் சிவந்து காணப்படுதல்



மேற்கூறிய பிரதான நோய் அறிகுறிகளுடன்

- வாந்தி
- தலையிடி
- உடல் பலவீனம்
- சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல்
- சிறுநீர் வெளியேறும் அளவு குறைதல்

**இந்த அறிகுறிகள் ஆபத்தான சிக்கல்களின் ஆரம்ப கட்டங்களாக இருக்கலாம்.**